<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>
<u>அசல் வழக்கு எண்.49/2018</u>

பெயர்- திரு. பழனிச்சாமி நாள்.08.01.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 :1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. பொது மக்கள் பயன்படுத்தி கொண்டிருந்த வண்டிப்பாதையை காலி இடமாக காண்பித்து நான் கடந்த 08.01.2018ல் ஏற்படுத்தி கொண்ட கிரய பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. அது என்னுடைய பட்டா பூமி ஆகும். மேற்படி இடமானது 22 ஆண்டுகளுக்கு மேலாக பொது மக்கள் பொதுப்பாதையாக பயன்படுத்தி வந்த சொத்து என்பதால் மேற்படி பகுதி எனக்கு சொந்தமில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து காண்பிக்கவில்லை என்றால் சரிதான்.

2. தற்போதும் மேற்படி பகுதியானது பொது மக்கள் பயன்படுத்தி வரும் தார் ரோடாக உள்ளது என்றும் நான் ஆவணங்களை உற்பத்தி செய்து கொண்டு இத்தாவாவை தாக்கல் செய்து பரிகாரம் தேடி கொள்ள விழைகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

அரியப்பம் பாளையம் டவுன் பஞ்சாயத்து தாவா இடத்தை என்னிடம் இருந்து எடுப்பதற்கு எவ்வித நில எடுப்பு அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை.

**மறுகுறுக்குவிசாரணை**

சொத்தே உங்களுக்ககு பாத்தியப்பட்டதல்ல என்பதால் நில எடுப்புகான அறிவிப்பு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

**<u>பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வழக்கானது குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.</u>**

PUSHPARAJ SHARMILA

Digitally signed by PUSHPARAJ SHARMILA
Date: 2025.01.08 20:16:26 +0530